ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ நாவகாரியம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நாவகாரியம் ॥

## திருக்கோட்டியூர்ச் சிறப்பு

‡நாவகாரியம் சொல் இலாதவர்⋆
    நாள்தொறும் விருந்தோம்புவார்⋆
தேவ காரியம் செய்து⋆ வேதம்
    பயின்று வாழ் திருக் கோட்டியூர்⋆
மூவர் காரியமும் திருத்தும்⋆
    முதல்வனைச் சிந்தியாத⋆ அப்-
பாவகாரிகளைப் படைத்தவன்⋆
    எங்ஙனம் படைத்தாங்கொலோ! (1)

குற்றம் இன்றிக் குணம் பெருக்கிக்⋆
    குருக்களுக்கனுகூலராய்⋆
செற்றம் ஒன்றும் இலாத⋆ வண்கையி-
    னார்கள் வாழ் திருக் கோட்டியூர்⋆
துற்றி ஏழ் உலகுண்ட⋆ தூ மணி
    வண்ணன் தன்னைத் தொழாதவர்⋆
பெற்ற தாயர் வயிற்றினைப்⋆ பெரு
    நோய் செய்வான் பிறந்தார்களே (2)

வண்ண நல் மணியும் மரகதமும்
    அழுத்தி⋆ நிழல் எழும்
திண்ணை சூழ்⋆ திருக் கோட்டியூர்த்⋆ திரு
    மாலவன் திரு நாமங்கள்⋆
எண்ணக் கண்ட விரல்களால்⋆ இறைப்-
    பொழுதும் எண்ணகிலாது போய்⋆
உண்ணக் கண்ட தம் ஊத்தை வாய்க்குக்⋆
    கவளம் உந்துகின்றார்களே (3)

உரக மெல் அணையான் கையில்⋆ உறை
    சங்கம் போல் மட அன்னங்கள்⋆
நிரைகணம் பரந்தேறும்⋆ செங்-
    கமல வயல் திருக் கோட்டியூர்⋆
நரகநாசனை நாவில் கொண்டழை-
    யாத⋆ மானிட சாதியர்⋆
பருகு நீரும் உடுக்கும் கூறையும்⋆
    பாவம் செய்தன தாம் கொலோ! (4)

ஆமையின் முதுகத்திடைக் குதி
    கொண்டு⋆ தூ மலர் சாடிப் போய்⋆
தீமை செய்திளவாளைகள்⋆ விளை-
    யாடு நீர்த் திருக் கோட்டியூர்⋆
நேமி சேர் தடங்கையினானை⋆
    நினைப்பிலா வலி நெஞ்சுடை⋆
பூமி பாரங்கள் உண்ணும் சோற்றினை
    வாங்கிப்⋆ புல்லைத் திணிமினே (5)

பூதம் ஐந்தொடு வேள்வி ஐந்து⋆
    புலன்கள் ஐந்து பொறிகளால்⋆
ஏதம் ஒன்றும் இலாத⋆ வண்கையி-
    னார்கள் வாழ் திருக் கோட்டியூர்
நாதனை நரசிங்கனை⋆ நவின்-
    றேத்துவார்கள் உழக்கிய⋆
பாத தூளி படுதலால்⋆
    இவ்வுலகம் பாக்கியம் செய்ததே (6)

குருந்தம் ஒன்றொசித்தானொடும் சென்று⋆
    கூடி ஆடி விழாச் செய்து⋆
திருந்து நான்மறையோர்⋆ இராப்பகல்
    ஏத்தி வாழ் திருக் கோட்டியூர்⋆
கருந் தடமுகில் வண்ணனைக்⋆ கடைக்-
    கொண்டு கைதொழும் பத்தர்கள்⋆

இருந்தவூரிலிருக்கும் மானிடர்⋆
எத்தவங்கள் செய்தார் கொலோ! (7)

நளிர்ந்த சீலன் நயாசலன்⋆
அபிமான துங்கனை⋆ நாள்தொறும்
தெளிந்த செல்வனைச்⋆ சேவகங்கொண்ட
செங்கண் மால் திருக் கோட்டியூர்⋆
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன்⋆ குணம்
பாடுவார் உள்ள நாட்டினுள்⋆
விளைந்த தானியமும் இராக்கதர்⋆
மீது கொள்ளகிலார்களே (8)

கொம்பினார் பொழில்வாய்க்⋆ குயிலினம்
கோவிந்தன் குணம் பாடு சீர்⋆
செம்பொனார் மதில் சூழ்⋆ செழுங்-
கழனி உடைத் திருக் கோட்டியூர்⋆
நம்பனை நரசிங்கனை⋆ நவின்-
றேத்துவார்களைக் கண்டக் கால்⋆
எம்பிரான் தன் சின்னங்கள்⋆ இவர்
இவர் என்றாசைகள் தீர்வனே (9)

காசின் வாய்க் கரம் விற்கிலும்⋆
கரவாது மாற்றிலி சோறிட்டு⋆
தேச வார்த்தை படைக்கும்⋆ வண்கையி-
னார்கள் வாழ் திருக் கோட்டியூர்⋆
கேசவா! புருடோத்தமா!⋆ கிளர்
சோதியாய்! குறளா! என்று⋆
பேசுவார் அடியார்கள்⋆ எம் தம்மை
விற்கவும் பெறுவார்களே (10)

‡சீத நீர் புடை சூழ்⋆ செழுங்-
கழனி உடைத் திருக் கோட்டியூர்⋆
ஆதியான் அடியாரையும்⋆
அடிமையின்றித் திரிவாரையும்⋆

கோதில் பட்டர்பிரான்⋆ குளிர் புது-
　　வைமன் விட்டுசித்தன் சொல்⋆
ஏதம் இன்றுரைப்பவர்கள்⋆
　　இருடீகேசனுக்காளரே (11)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥